**மில்லனிய பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 ஒக்தோபர் 02 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2019 ஒக்தோபர் 27 திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஒக்தோபர் 29 திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மில்லனிய பிரதேச சபையின் 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் சபையை நிறுவுவதற்கென பண்டாரகம பிரதேச சபையிடமிருந்து பெறப்பட்ட ரூபா 4,000,000 ஒதுக்கத்தின் கீழ் காட்டப்படாது கொடுப்பனவு செய்ய வேண்டிய வைப்பாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | சரிவரக் கணக்கிலிடப்பட வேண்டும். | திருத்தம் செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | மீளாய்வாண்டிற்கான மூலதனச் செலவினம் ரூபா 9,655,089 ஆகுமெனினும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 9,969,024 ஆக அதனைக் காட்டியமையால் மூலதனச் செலவினம் ரூபா 313,935 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | சரிவரக் கணக்கிலிடப்பட வேண்டும். | திருத்தம் செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iii) | மீளாய்வாண்டிற்கான மீண்டுவரும் செலவினம் ரூபா 31,324,229 ஆகுமெனினும், நிதிக்கூற்றுக்களில் அதனை ரூபா | சரிவரக் கணக்கிலிடப்பட வேண்டும். | திருத்தம் செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | 30,792,260 ஆகக் காட்டியமையால் மீண்டெழும் செலவினம் ரூபா 531,969 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (iv) | மீளாய்வாண்டின் போது ரூபா 714,050 க்குக் கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்கள் மூலதனமாக்கப்படவில்லை. | சரிவரக் கணக்கிலிடப்பட வேண்டும். | திருத்தம் செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |

**1.4 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | 2015 டிசம்பர் 28 ஆந் திகதிய 1888/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி | 124,938 | சபையின் அதிகாரத்திற் குட்பட்ட பிரதேசத்தில் பொருத்தப்பட்டுள்ள 54 விளம்பரப் பலகைகளுக்குள் கட்டணம் அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கட்டணம் அறவிடப்பட வேண்டும். | விளம்பர பலகைகளுக்குப் பணம் செலுத்துமாறும் அதிகாரமற்றவற்றை அகற்றுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2016 டிசம்பர் 29 ஆந் திகதிய 2016/30 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | - | சபையின் 06 வாகனங்களது எரிபொருள் நுகர்வு பரிசீலிக்கப் படவில்லை. | எரிபொருள் நுகர்வு பரிசீலிக்கப் பட வேண்டும். | ஏற்றுக் கொள்கின்றோம். எரிபொருள் நுகர்வைப் பரிசிலீப்பதற்கு குறித்த சாரதிகள் பணிக்கமர்த்தப் பட்டுள்ளனர். |

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 நிதிப் பெறுபேறுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 14,189,878 ஆகும்.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**செயல்நடவடிக்கைத் திட்டம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2018 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட பாதீட்டில் ரூபா 42.59 மில்லியன் தொகையான மீண்டெழும் மற்றும் மூலதன செலவின விடயத்திற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் முறையாகத் தயாரிக்கப்படவில்லை. | வருடாந்த பாதீட்டு நிதிஏற்பாட்டின் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட சபை ஆனமையால் தாமதம் ஏற்பட்டதுடன் 2019 இன் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | 2018 ஆம் ஆண்டில் ரூபா 42.59 மில்லியன் தொகையான பாதீட்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் இனங்காணப்பட்ட 50 நிகழ்ச்சித் திட்டங்களுக்காக தயாரிக்கப்பட்ட 140 செயற்பாடுகளுக்காக வருடாந்த செயலாற்றலை அளவிடும் முறைமையொன்று காணப்படவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் இனங்காணப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் வருடாந்த செயலாற்றல் அளவிடப்பட வேண்டும். | புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட சபை ஆனமையால் தாமதம் ஏற்பட்டதுடன் 2019 இன் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டில் 17 நடைபெறும் வேலைகளின் பொருட்டு சுற்றாடல் பத்திரங்களைச் சபை வழங்கவில்லை. மேலும், செல்லுபடிக்காலம் முடிவடைந்த 06 அனுமதிப்பத்திரங்களுக்குப் | சுற்றாடல் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படாதவற்றிற்கு அவற்றை வழங்கவும் வழங்கப்பட்ட வாறிருக்கும் புதியவற்றை | 2018 ஆம் ஆண்டின் போது அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | புதிய அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | |
| (ஆ) | பண்டாரகம பிரதேச சபை 2018 பெப்ரவரி 15 ஆந் திகதியின் பின்னர் பண்டாரகம மற்றும் மில்லனிய என இரு பிரதேச சபைகளாக்கப்பட்டன. அதன் விளைவாக மில்லனிய பிரதேச சபைக்குரிய சொத்துக்களும் பொறுப்புகளும் 2019 யூலை 26 வெவ்வேற்றாக்கப்படவில்லை. | இரு சபைகளதும் சொத்துக்களும் பொறுப்புகளும் துரிதமாக வெவ்வேறாக்கப்பட வேண்டும். | இது களுத்துறை உதவி உள்ளூராட்சி ஆணையாளரால் மேற்கொள்ளப்பட வேண்டும். ஞாபகமூட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்டு வேலை துரிதப்படுத்தப் பட்டுள்ளது. |
| (இ) | மீளாய்வாண்டில் பெறப்பட்ட 05 பொதுமக்களது புகார்கள் சம்பந்தமாக சபை நடவடிக்கை எடுக்கவில்லை. | பொது மக்களது புகார்களை விசாரித்து துரித தீர்வு செய்யப்பட வேண்டும். | வரையறுக்கப்பட்ட மென்சன்ஸ் லங்கா கம்பனி சுவரை நிர்மாணித்தது சம்பந்தமான பிரச்சினை நெடுங்காலமாக உள்ளது. அனுமதியற்ற நிர்மாண வேலை சம்பந்தமாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 04 இரண்டாம் நிலைப் பதவிகளும் 12 ஆரம்ப நிலைப் பதவிகளும் உள்ளன. வெற்றிடங்கள் முறையே 05, 43 என்பனவாகும். | வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். | 2019 யூன் 30 ஆந் திகதியளவில் 01 இரண்டாம் நிலைப் பதவியில் 01 வெற்றிடமும் 04 ஆரம்ப நிலைப் பதவிகளில் 04 வெற்றிடம் இருந்தன. ஆட்சேர்ப்புக்கு அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது. |

**3.4 பெறுகை**

**3.4.1 பெறுகை திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக பொருட் கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்படவில்லை. | முறையான பொருட் கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் திருத்தப்படும். |

**3.4.2 ஒப்பந்த நிர்வாகம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| BSR மற்றும் HSR ரேட்கள் இல்லாத பொருள் ஒன்றிற்கு விசேட ரேட் பயன்படுத்தப்பட்டிருந்தது. அந்த ரேட்களுக்கு பயன்படுத்தப்பட்டிருந்தது. அந்த ரேட்களுக்கு அங்கீகாரம் பெறப்படாது 2018 ஆம் ஆண்டில் 02 நிர்மாண வேலை ஒப்பந்தங்களுக்கு ரூபா 1,009,870 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | விசேட ரேட்களுக்கு அங்கீகாரம் பெறப்பட வேண்டும். | எதிர்காலத்தில் தேவையான அறிவுறுத்தலுடன் கூறுவிலைகள் கோரப்பட்டு செயற்திட்டங்கள் நடைபெறும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டிற்கான உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்டு அதற்கமைய உள்ளகக் கணக்காய்வு அமுலாக்கப்படவில்லை. | சபையின் நடவடிக்கைகளுக்கு உள்ளகக் கணக்காய்வு அமுலாக்கப்பட வேண்டும். | உள்ளகக் கணக்காய்வுக் கூறு நிறுவப்பட்டுள்ளது. அது விதிமுறைப்படி எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். |